வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=
# ஈழநாடு
Eelanadu
Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 28.10.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 301 பக்கங்கள் : 08




# தமிழ் தேசிய கட்சிகளின் பிளவால் தீர்வின் முக்கியத்துவம் மூடிமறைப்பு

## வடக்கிலிருந்து ஒருமித்த குரல் அவசியம்

## வலியுறுத்துகின்றார் சிறிதுங்க ஜயசூரிய



கொழும்பு, ஒக்ரோபர் 28

**“தமிழ்த் தேசியக் கட்சிகள் பிளவுபட்டு நிற்பதால் தமிழர்களுக்கான தீர்வுத் திட்டத்தின் முக்கியத்துவமும் மூடி மறைக்கப்பட்டு வருகின்றது. எனவே, பொது வேலைத் திட்டத்தின் கீழ் வடக்கில் இருந்து ஒருமித்த குரல் அவசியம்.” -இவ்வாறு ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய வலியுறுத்தினார்.**

மாகாண சபைகள் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஆளுங் கட்சிக்கான மக்கள் ஆதரவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கூட்டுறவு தேர்தல்களில் கூட ஆளுங்கட்சிக்கு தோல்வி ஏற்பட்டு வருகின்றது. எனவே, மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்கே அதிகார தரப்பு முற்படக் கூடும். அதற்கான ஆயுதமாக எல்லை நிர்ணய விடயம் பயன்படுத்தப் படலாம்.

எனினும், இந்தியா மற்றும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை என்பன

07

# யாழில் சட்டவிரோத சொத்து சேர்த்த 11 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்!

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக சொத்துக்கள் குவித்த 11 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் காரியாலய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற விழிப் புணர்வு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு

07

# உலகில் பார்வையிடக்கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம்

கொழும்பு, ஒக். 28

2026 ஆம் ஆண்டில் உலகில் பார்வையிடக்கூடிய சிறந்த நகரங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் பெயரிடப் பட்டுள்ளது.

உலகளாவிய பயண ஊடக நிறுவனமான லோன்லி பிளனட் நிறுவனம் இதனை அறிவித்துள்ளது.அத்துடன், இது தனித்துவமான

07

# போதைப்பொருள் பாவனை 3 வருடங்களில் ஒழிக்கப்படும்

## பொது பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக். 28


அடுத்த 3 வருடங்களில் நாட்டிலிருந்து போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கம்பஹா பகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரை போதைப் பொருளில் இருந்து பாதுகாப்பதற்கான தேசிய திட்டம் சமயத்தலைவர்களின் ஆசிர்வாதத்துடனும் மக்களின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்படும் என நாங்கள் நம்புகிறோம். அவ்வாறு செய்வதன் ஊடாக

07



கந்தசஷ்டியின் 6ஆம் நாளான நேற்றைய தினம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சூரன் போர் நடைபெற்றவேளை... (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் அவசர சந்திப்பு

கொழும்பு, ஒக். 28

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள ‘மாபெரும் மக்கள் குரல்’ எதிர்ப்புப் பேரணி குறித்துப் கலந்துரையாடுவதற்காக, எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்

07

# வெளிநாடுகளில் பணி புரிந்துவரும் இலங்கையர்களுக்கு வாக்குரிமை!

கொழும்பு, ஒக். 28

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிவிகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சகமும் இந்தச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகவும், இலக்கை விரைவாக அடைவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு

07

# அஸ்வெசும திட்டத்துக்கு புதிய தரவமைப்பு தேவை

## உலக வங்கி பிரதிநிதிகள் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 28

அஸ்வெசும சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்குத் தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்கும்போது புதுப்பிக்கப் பட்ட மற்றும் துல்லியமான தரவுக் கட்டமைப்பு அவசியம் என உலக வங்கியின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் சர்வதேச அனுபவத்தை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார

07

# அரசு பதவி காலத்தை நிறைவு செய்ய இடமளிப்பதற்கு மக்கள் தயாரில்லை!

## சுதந்திர கட்சி கூறுகிறது

கொழும்பு, ஒக். 28

நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளதால் அரச நிர்வாகத்தை நாங்கள் நெருக்கடிக்குள்ளாக்கவில்லை. 5 வருட பதவி காலத்தை நிறைவு செய்தற்கு இடமளித்தோம். ஆனால் அரசாங்கம் பதவி காலத்தை நிறைவு செய்ய இடமளிப்பதற்கு நாட்டு மக்கள் தயார் நிலையில் இல்லை என சுதந்திர கட்சியின் சிரேஷ்ட தலைவர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை

07

# சட்டவிரோதமாக சொத்துகள் குவித்தோரிடம் துப்பாக்கியா?

## யாழ். பொலிஸார் விசாரணையில்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான சொத்து குவிப்புடன் தொடர்புள்ளவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களிடம் கைத்துப்பாக்கிகள் இருக்கின்றனவா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடக்கி விட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமாக

07

# பொலிஸ் மா அதிபரின் அறிவிப்பு; ஐக்கிய மக்கள் சக்தி அதிருப்தி!

கொழும்பு, ஒக். 28

பொலிஸ்மா அதிபரின் அறிவிப்பானது சுதந்திரமான பொலிஸ் சேவையின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

07

# ஹிட்லரின் பொலிஸார் போன்று இலங்கை பொலிஸாரின் நடத்தை

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 28

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதிக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்டுள்ள மரண தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் இப்போது பாதாளக் குழுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் ஹிட்லரின் பொலிஸாரை போன்று செயல்படுகிறார்கள் என பிவி துறு ஹெல உறுமய கட்சியின்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டவர்களின் நினைவுத்தூபியை மீளமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 28

சாவகச்சேரியில் வீதியோரத்தில் இருந்த நிலையில் இடித்தழிக்கப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டவர்களின் நினைவுத்தூபியை மீளவும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா. கிஷோர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீதியில் இருந்து 4 அடிகள் தூரத்திலும், தனியார் காணியின் எல்லைக்கு வெளியே குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்டவர்களின் நினைவுத் தூபி இருந்தது.

தனது காணியை பிரித்து விற்பனை செய்யும்போது அந்த இடத்தில் வாசல் வரும் என்ற காரணத்துக்காக ஒருவரால் சுய நலநோக்குடன் இந்த நினைவுத் தூபி இடிக்கப்பட்டது.

குமரப்பா, புலேந்திரன் உட்பட்ட, தென்மராட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய பல போராளிகளின் உருவப்படங்கள் இந்த தூபியில் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த தூபியை உடைத்தவர் அதனை மீண்டும் கட்டித்தருவதாக கூறியிருந்தார். ஆனால், இதுவரை எந்தவிதமான வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

பொதுமக்களுக்கோ அல்லது தனியாரின் காணிக்கோ இடையூறு இல்லாமலேயே அந்த தூபி அமைந்திருந்தது. அந்த தூபியானது மீண்டும் கட்டப்படவேண்டும்.

எங்களுடைய இனத்தின் நினைவுகள் எதிர்கால சந்ததியிடம் கொண்டு செல்லப்படவேண்டும். ஆகவே இந்தத் தூபியை புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டிருக்கின்றோம்-என்றார். (அ-05)

# அரசடிக்குளம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஸ்மார்ட் வகுப்பறைக்கு அடிக்கல் நாட்டல்

வவுனியா, ஒக். 28


வவுனியா பாவற்குளம் படிவம் 03, அரசடிக்குளம் கனிஸ்ட உயர்தர வித்தியாலயத்துக்கான ஸ்மார்ட் வகுப்பறைக்கான அடிக்கல்லை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் நேற்று நாட்டினார்.

அத்துடன் மைதான புனரமைப்பையும் ஆரம்பித்து வைத்தார்.

23 இலட்சம் ரூபா மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் குறித்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி மனோகரன் கேதீஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினர்களான இசையாஸ் மிறால், தர்மபாலன் மற்றும் கிராம சேவையாளர் அஸ்லாம், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)



# பொலிஸாருக்கு செயலமர்வு

கிளிநொச்சி, ஒக். 28

போக்குவரத்து அபராதங்களை செலுத்துவது குறித்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச சேர்ந்த போக்குவரத்து பொலிசாருக்கான விழிப்புணர்வு கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

குறித்த விழிப்புணர்வு செயல மர்வில் போக்குவரத்து, நெடுஞ் சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சின் டிஜிற் றல் பணிக்குழு தலைவர் ஹர்ஷ புரசிங்க, வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட போக்குவரத்து பொலிஸார் கலந்து கொண்டனர்.

நாளைய தினம் வட மாகாணத்திற்கான போக்குவரத்து அபராதங்களை கோவ் பே மூலம் செலுத்தும் ஆரம்ப நிகழ்வு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாண தமிழ் சங்கத்துடன் அரசகருமமொழிகள் திணைக்களம் இணைந்து நடத்திய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் அரசகரும மொழிகள் திணைக்களமும் இணைந்து நடத்திய புலமைத்துவக் கலந்துரையாடலின் முதலாவது நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தகைசார் விருந்தினர் களாக யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் அரசகரும மொழிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் திலக் நந்தன ஹெட்டியாராய்ச்சி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்ச்சங்க உப செயலாளர் முனைவர் கி.அருட்செல்வி வரவேற்புரையாற்றினார். புலமைத்துவ உரைகளை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன், உருகுணைப் பல்கலைக்கழக சிங்களத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்மிக்க ஜெயசிங்க, தென்னாடு பத்திரிகை ஆசிரியர் ஜீவா சஜீவன் ஆகியோர் வழங்கினர். பேராசிரியர் சி. பத்மநாதன் சமூகமளிக்காத நிலையில் அவரது சார்பில் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் உரையை சமர்ப்பித்தார். தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் சி. வடிவழகையன் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வுகளை தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை மாணவருமாகிய யோ. நிவேதன் முன்னிலைப்படுத்தினார்.

புலமைத்துவக் கலந்துரையாடலின் தொடர் நிகழ்வுகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ-05)

# யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலாளராக சிவகாமி



யாழ்ப்பாணம், ஒக். 28

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக சிவகாமி உமாகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றையதினம், மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் இருந்து சிவகாமி உமாகாந்தன் தமக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் கடந்த ஆறு வருட காலமாக கரவெட்டியில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிவந்த நிலையில், நேற்று யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். (அ-05)

# மின்சாரம் தாக்கி யானை பலி!

வவுனியா, ஒக். 28

வவுனியா - கனகராயகுளம் குறிசுட்ட குளம் பகுதியில் தோட்ட காணி ஒன்றுக்கு போடப்பட்டிருந்த யானை வேலியில் பாய்ந்த மின்சாரம் தாக்கியதில், யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

நேற்று காலை தோட்டத்திற்குச் சென்ற விவசாயி, யானை ஒன்று இறந்து கிடந்ததை அவதானித்து கனகராயன்குளம் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து



சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் இவ்விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கலாநிதி சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டையொட்டி விவாதப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 28

தமிழறிஞரும் யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபருமாகிய கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளையின் நூற்றாண்டையொட்டி வட மாகாணப் பாடசாலைகளிடையே விவாதச் சுற்றுப்போட்டி ஒன்றை யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் ஆர்வமுடைய பாடசாலைகள் போட்டியாளர் முழுப்பெயர், பொறுப்பாசியர் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தமது பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 08.11.2025 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கச் செயலாளர் கோரியுள்ளார்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் போட்டி இணைப்பாளர் தெ. ஹர்சனை 075 955 6041 / 076 755 6041 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் எனவும் தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளின் சுற்றுநிருபத்தைத் தழுவிய நிலையில் நவம்பர் மாத இறுதியில் போட்டிகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-05)

# செம்பியன்பற்றில் வர்த்தக சந்தை

யாழ்ப்பாணம், ஒக். 28

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் திருப்பலியை தொடர்ந்து வர்த்தக சந்தை இடம்பெற்றது.

குறித்த வர்த்தக சந்தை மறைபரப்பு ஞாயிற்றுக்கிழமையை சிறப்பிக்கும் முகமாக செம்பியன்பற்று பங்கின் புனித பிலிப்பு நேரியார் ஆலய ஆன்மீக தொண்டு அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த வர்த்தக சந்தையில் காலை உணவு வகைகள் மற்றும் மரக்கறிகள், பழவகைகள், இறைச்சி வகைகள் என பல்வேறுபட்ட பண்டங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் விற்பனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ் வர்த்தக சந்தையில் பொதுமக்கள், செம்பியன்பற்று பங்குதந்தை ஜஸ்டின் ஆதர் மற்றும் அருட்சகோதரிகள் ஆன்மீக தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# ஆபத்தை உணர்வது அவசியம்

தென்னிலங்கையின் பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதல்களும் அரசாங்கம் அவர்களை இலக்கு வைத்து முன்னெடுத்துவரும் நகர்வுகளுமே இன்றையநிலையில், இலங்கையின் பிரதான செய்திகளாக இருக்கின்றன. பாதாள உலகக் குழுக்கள் தொடர்பான செய்திகள் இலங்கைக்கு புதிது அல்ல. ராஜபக்ஷ காலத்தில் பாதாளக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் சிலர் அரசியலிலும் கோலோச்சியிருக்கின்றனர். மேர்வின் சில்வா தொடக்கம் துமிந்த சில்வா வரை பாதாளக் குழுக்கள் தொடர்பான சர்ச்சைகள் உள்ளவர்கள்.

அரசியல்வாதிகள் தங்களின் தேர்தல் வெற்றிக்காக பாதாள உலகக் குழுக்களைப் பயன்படுத்துவதும் அதேபோன்று பாதாளக் குழுக்கள் தங்களின் செயல்பாடுகளுக்கு அரசியல் தரப்புகளை பயன்படுத்துவதும் தென்னிலங்கையில் சாதாரணமான ஒன்றாகவே இருந்திருக்கிறது. சில விடயங்கள் தெரிந்தாலும்கூட, அதனைக் கண்டும் காணாமல் விடுவதும் அரசியல் உயரடுக்கினர் மத்தியில் இருந்திருக்கிறது.

ஆனால், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததிலிருந்து பாதாளக் குழுக்களை இலக்கு வைக்கும் செயல்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஒருபுறம் இது பாதாளக் குழுக்களைக் கட்டுப்படுத்தும் விடயமாக இருந்தாலும்கூட மறுபுறம் பாதாளக் குழுக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அரசியல்வாதிகளையும் சுற்றிவளைக்கும் நகர்வாகவும் இருக்கிறது. இந்தநிலையில்தான் பரஸ்பர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மாறிமாறி இலக்கு வைக்கப்படும் அனைவருமே பாதாள உலகத் தொடர்புகள் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனால், ஒரு கொலையுடன் சம்பந்தப்பட்டு - தேடப்பட்டு வந்த செவ்வந்தி என்னும் பெண்ணின் கைதைத் தொடர்ந்து, இதில் ஒரு திருப்புமுனையும் ஏற்பட்டிருக்கிறது. குறித்த பெண் தமிழ்நாடு வழியாகத் தப்பித்துச் செல்வதற்கு யாழ்ப்பாணமே அடைக்கலமாக இருந்திருக்கிறது. என்னும் செய்தி சாதாரணமான ஒன்றல்ல. யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்கள் இயங்கி வருகின்றன. அவைகள் அவ்வப்போது தங்களுக்குள்ளும் அதேவேளை, சிலரை இலக்கு வைத்து வாள்வெட்டுகளிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

தற்போது வெளிவந்திருக்கும் தகவல்களோ முற்றிலும் மாறானவை. விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்தவர்கள் குறித்த பெண்ணுக்கு உதவியிருக்கின்றனர். அதேவேளை விடுதலைப் புலிகள் பயன்படுத்திய துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. என்னும் தகவல் ஓர் ஆபத்தை உணர்த்துகிறது. ஒரு சிலரின் இவ்வாறான செயல்பாடுகளானவை விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னைநாள் உறுப்பினர்கள் அனைரையும் சந்தேகத்துடன் நோக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. பாதுகாப்பு தரப்புகள் மட்டுமன்றி, தமிழ் சமூகமும் இவர்களை சந்கேதத்துடன் நோக்கும் நிலைமை ஏற்படும்.

2009இல் யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து சமூக ரீதியிலும் உள ரீதியிலும் அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பு ஒன்றைக் குறிப்பிட முடியுமென்றால், அது விடுதலைப் புலிகளின் முன்னைநாள் உறுப்பினர்கள்தான். அவர்களைமீளவும் சமூகத்தோடு இணைக்கும் வேலைத்திட்டங்களை எந்தவொரு தமிழ்த் தேசியக் கட்சியும் முன்னெடுக்கவில்லை. ஒரு வகையில் போர் தோல்வியானது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை தமிழ் சமூகத்தின் விளிம்புநிலை மனிதர்களாக்கியது. பொதுவாக மற்றவர்களால் கவனிக்கப்படாதவர்கள் எவ்வாறான வழிகளில் சென்றாவது தங்களைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிப்பர். இந்தப் பின்னணியில்தான் தென்னிலங்கையின் பாதாளக் குழுக்களும் இவர்கள்மீது கண்வைத்திருக்கிறது. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

## கிரிந்த மீன்பிடி துறைமுகம் நவீனமயம்!

கொழும்பு, ஒக். 28

கிரிந்த மீன்பிடி துறைமுகத்தை நவீன மயப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

குறித்த பகுதிக்கு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேற்று கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

கிரிந்த துறைமுகத்தில் மணல் குவிவதால் கடற்றொழிலாளர்கள் நெருக்கடியை எதிர்கொள்வதாக அமைச்சரிடம் முறையிடப்பட்டிருந்தது.

அதற்கமைய, குறித்த மணலை அகற்றி, துறைமுகத்தை நவீன மயப்படுத்துவதற்குரிய நடவடிக்கை அடுத்த வாரம் ஆரம்பமாகும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கடல்வளம் மற்றும் கடற்றொழிலாளர்களை பாதுகாப்பது அரசாங்கத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும் எனவும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

## சுற்றிவளைப்பில் பலர் கைது!

கொழும்பு, ஒக். 28

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 884 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 781 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், 17 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 305 பேரும், திறந்த பிடியாணைகளுடன் 180 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 26 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 25 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 4,306 பேர் பிற போக்குவரத்து குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் ஒருவர் மரணம்

கொழும்பு, ஒக். 28

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் சந்திப்பு பகுதியிலிருந்து மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைந்த கார் ஒன்று, முன்னால் பயணித்த லொறியின் பின்புறத்தில் மோதுண்டு இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

குறித்த காரின் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காரில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும், இருவர் பலத்த காயமடைந்து குருநாகல் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக். 28

பத்தேகம - சந்தராவல பகுதியில் இரண்டு மாடி வீட்டின் மேல் மாடியில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் பெண்ணின் சடலமொன்று மீட்க்கப்பட்டதாக பத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பத்தேகம, சந்தராவல பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொலை செய்யப்பட்ட பெண் ஒரு மின்சாதனக் கடையின் மேல் மாடியில் தனியாக வசித்து வந்ததாகவும், அவர் எப்போது கொலை செய்யப்பட்டார் என்பதை சரியாகக் கூற முடியாது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மேல் மாடிக்குச் சென்ற அயலவர்கள் குழு ஒன்று அவர் கொலை செய்யப்பட்டிருப்பதை கண்டு பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண்ணின் கொலை குறித்த விபரங்கள் இன்னும் வெளியாகவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## விமான நிலையத்தில் 2 இளைஞர்கள் கைது

கொழும்பு, ஒக். 28

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்களுடன் இளைஞர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரும் மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவரும் கம்பஹா - வெயாங் கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவரும் ஆவர்.

சந்தேக நபர்களான இளைஞர்கள் இருவரும் டுபாயில் இருந்து நேற்று அதிகாலை 12.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 28 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 11
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சப்தமி




**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். ஆடை ஆபரணம் சேரும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் தொடங்குவதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். நீங்கள் கொஞ்சம் சிக்கனமாக இருங்கள். உத்தியோகத்தில் ஈகோ வந்து செல்லும்.

**மிதுனம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் தங்கும். செல்ல வேண்டுமென்று நினைத்திருந்த இடத்திற்கு சென்று வருவீர்கள்.

**சிம்மம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**கன்னி**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும்.

**துலாம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். அதிகாரப் பதவிகளில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முன்கோபம் குறையும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். உடல் நிலை சீராகும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**மகரம்**
இன்றைய தினம் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
புதிய கோணத்தில் பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய வழி பிறக்கும்.

**மீனம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். சாதிக்கும் நாள்.

# "எல்லை நிர்ணயத்தை காரணம் காட்டி மாகாண தேர்தலை இழுத்தடிக்க கூடாது"

யாழ்ப்பாணம், ஒக். 28

மாகாணத்தின் அதிகாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்றால் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணய விடயத்தைக் காண்பித்து இழுத்தடிப்பு செய்யக்கூடாதென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அரச தரப்பால் மாறுபட்ட கருத்துகள் தெரிவிக்கப்பட்டுவருவது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைத்தேர்தல் தொடர்பில் அரசாங்கம் மாறுபட்ட கருத்துகளை கூறிவருகின்றது. மாகாண சபைத்தேர்தலை அடுத்த வருடம் நடத்தப்போவதாக ஒருபக்கம் கூறுகிறது. மறுபக்கத்தில் எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கை இறுதியாக்கப்பட்டு புதிய முறையில் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக கூறுகின்றது.

பாராளுமன்றில் எல்லை நிர்ணய ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது தற்போதைய ஆட்சியாளர்களும் சேர்ந்து தான் அன்று எதிர்த்தார்கள். தற்போது தேர்தலை வைப்பதாயின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் முன்வைத்துள்ள தனிநபர் பிரேரணையை நிறைவேற்றுவதன் ஊடாக பழைய முறையில் தேர்தலை நடத்தலாம்.

ஆனால், ஆட்சியில் உள்ள அரசாங்கம் அதனை நிறைவேற்றுவதற்கு தயாராக இல்லை. அடுத்த வருடம் தேர்தலை வைப்பதாக இருந்தால் பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கான பாராளுமன்ற அனுமதி தேவையாகவுள்ளது.

அவ்வாறு இல்லாமல் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்ய வேண்டுமென்றால் அதற்கு பல வருடங்களாகும். ஆகவே, தேர்தலுக்கு உடனடியான சத்தியமில்லை. அந்த வகையில் அரசாங்கம் உண்மையாக என்ன செய்யப் போகிறது என்பதை கூறவேண்டும்.

கடந்த காலத்தில் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கு முற்பட்டபோதுதான் தென் பகுதியில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது போகிறது, மலையகத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இல்லாது போகிறது என்ற பிரச்னை தோற்றம் பெற்றது.

எனவே, எல்லைகளை நிர்ணயம் செய்ய வேண்டும் என்றால் அதற்கு காலஅவகாசம் வேண்டும். அதற்கு ஒருவருடம் போதாது. அரசாங்கம் உண்மையாகவே தேர்தலை நடத்தப்போகின்றதா? என்பது பெரும் கேள்வியாகவுள்ளது.- என்றார்.

(எ)

# புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹெரோயின் வியாபாரி கைது!

யாழ்ப்பாணம், ஒக். 28

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 33 வயதுடைய ஹெரோயின் வியாபாரி ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது அவரிடமிருந்து 2 ஆயிரத்து 400 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில்இ சுன்னாகம் பொலிஸ் நிலைய பாரிய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.(எ-05)

# மாதத்தில் இரண்டு தடவை மக்களை சந்திக்க ஏற்பாடு

## வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர்

வவுனியா, ஒக். 28

மாதத்தில் இரண்டு தடவைகள் மக்கள் சந்திப்பை நடத்த தீர்மானித்துள்ளதாக வவுனியா - மன்னார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்பு கொட்டுவ தெரிவித்தார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களின் குறைகளை இனங்கண்டு அதனை தீர்க்கும் பொருட்டு மாதத்தில் இரண்டு நாட்கள் "பொதுமக்கள் குறை தீர்" நாளாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது புதன்கிழமைகளில் பிரதிப் பொலிஸ் மா அதிபரை சந்தித்து பொது மக்கள் தமது பிரச்னைகள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-10)

# வடமாகாண ஆளுநருடன் ரவிகரன் எம்.பி. சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக். 28

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோருக்கிடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் ஆளுநர் வேதநாயகனின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அத்தோடு வன்னியில் காணப்படும் குறைபாடுகளை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பாராளுமன்ற உறுப்பினரால் அளுநரிடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# திருவிளையாடல் புராண சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 28

தெல்லிப்பழை மாவைகலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவு தொடர் 29 எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோ திமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "இரவாதஞ்செய்த படலம்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவும் நிகழ்த்துவார்.

(எ)

# நீர்வேலியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 28

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 43ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுருஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் க. கைலநாதன் "புதல்வரைப்பெறு படலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் சொற்பொழிவிலிருந்து

நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிகளின் சங்கமம் எமது அரசுக்கு சவாலல்ல!

## அமைச்சர் சமந்த வித்யாரத்ன



கொழும்பு, ஒக். 28

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவானது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது என்று அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு சவால் என்பதாலேயே ஒன்றிணைந்து பயணிப்பது பற்றி பரிசீலிக்கின்றன. அது அத்தரப்புகளின் சுயநல அரசியலின் வெளிப்பாடாகும் எனவும் அமைச்சர் கூறினார்.

"நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த வேளை அவர்கள் ஒன்றிணையவில்லை. போர் நடந்த காலகட்டத்தில்கூட இணைந்து பயணிக்கவில்லை. தற்போது இணைகின்றனர் எனில் அது அவர்களின் வங்குரோத்து அரசியலை வெளிப்படுத்துகின்றது." என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 34 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் இந்தியர் கைது!

கொழும்பு, ஒக். 28

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 34 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நபர் 32 வயதுடைய இந்தியர் ஆவார்.

அவர் நேற்று முன் தினம் மாலை சுமார் 4:15 மணியளவில் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சிறீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்துள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது அதிகாரிகள், அவரது பயணப் பைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ கிராம், 832 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை கண்டுபிடித்தனர்.

முதன்முறையாக இலங்கைக்கு வந்த குறித்த நபர், பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு ஹோட்டலில் உள்ளூர் போதைப்பொருள் வியாபாரி ஒருவரிடம் ஹெரோயின் கையிருப்பை ஒப்படைக்க திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினுடன், சந்தேக நபர் பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

# இலங்கையின் தேயிலை உற்பத்தி சீன முதலீட்டாளர் குழு ஆராய்வு



கொழும்பு, ஒக். 28

இலங்கையின் தேயிலை உற்பத்தி தொடர்பில் சீன முதலீட்டாளர்கள் குழுவொன்று ஆராய்ந்துள்ளது.

சீன முதலீட்டாளர்களின் குழு விவசாய அமைச்சின் அதிகாரிகளை சந்தித்து இதுபற்றிக் கலந்துரையாடியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன குழுவினர் விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுடன், சிறப்பு கலந்துரையாடல் நடத்தியது. இலங்கையில் தேயிலை உற்பத்தி குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இலங்கையல் தேயிலை உற்பத்தி பெரிய அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் சிறிய அளவிலான,என மூன்று நிலைகளில் நடைபெறுகிறது.

கடந்த ஆண்டு இலங்கை 245 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்தது.

இது இந்தியா ஏற்றுமதி செய்த தேயிலையை விட 24 மில்லியன் கிலோ குறைவாகும். இந்தியா தேயிலை ஏற்றுமதியில் இலங்கையை முந்தியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் உரத் தடையின் நீண்டகால விளைவுகளை மாற்றுவது தொடர்பாக அரசாங்கத்தின் தரப்பில் நிவாரணம் இல்லாததே உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணம் என்று தொழில்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# விபத்தில் சார்ஜன்ட் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 28

வெள்ளவாய - தனமல்வில பிரதான வீதியின் அடவெலயாய பகுதியில் நேற்று முன் தினம் மாலை நடந்த ஒரு வாகன விபத்தில் பொலிஸ் சாரஜண்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவாய நோக்கிச் சென்ற இராணுவ பஸ், எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் மீது நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயதுடைய வெள்ளவாயவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந்தார்.

# சாரதி அனுமதிப்பத்திர கட்டணம் எந்தவித அதிகரிப்பும் கிடையாது

கொழும்பு, ஒக். 28

சாரதி அனுமதிப்பத்திரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இதுவரை எந்தவொரு இறுதி தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு கட்டண உயர்வுக்கு விதிக்கப்பட்ட வரம்பு 15 வீதமாக இருந்தாலும், அது திருத்தத்திற்கான அதிகபட்ச வரம்பு மட்டுமேயாகும் அன்றி, தீர்மானிக்கப்பட்ட மதிப்பு அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஒவ்வொரு 3 வருடங்களுக்கும் ஒருமுறை கட்டணத் திருத்தம் இடம் பெறுவதால் இந்தக் கட்டணத் திருத்தம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இறுதியாகக் கட்டணத் திருத்தம் 2022ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 வீத கட்டணத் திருத்தம் பொதுவாக மேற்கொள்ளப்படவேண்டும். எனினும், இந்த ஆண்டுக்கான கட்டணத் திருத்தம் தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (அ)

# பொதுபாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை வேண்டும்!

கொழும்பு, ஒக். 28

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் தொளவத்த வலியுறுத்தியுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடமே அவர் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக சுட்டிக் காட்டி, உரிய பாதுகாப்பு கோரி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதி இருந்தார். எனினும்,

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்த விடயத்தை பிரதான காரணமாக கொண்டே மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட வேண்டும் எனவும் பிரேம்நாத் தொளவத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தமது நிலைப்பாட்டை இதுவரை அறிவிக்கவில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்குரிய பெரும்பான்மைபலம் எதிர்க்கட்சிவசம் இல்லாதபோதும், பொது பாதுகாப்பு அமைச்சர்மீது நம்பிக்கை இல்லை என்பதை வெளிப்படுத்தவும்,

நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்பதை சுட்டிக் காட்டவும் இப்பிரேரணையை ஒரு கருவியாக பயன்படுத்தலாம் என சில எதிரணி உறுப்பினர்கள் கருதுகின்றனர். (அ)

# 3,500 மெற்றிக் தொன் பொன்னி இறக்குமதி

கொழும்பு, ஒக். 28

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா அரிசி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, 3,500 மெற்றிக் தொன் பொன்னி சம்பா அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, அதன் முதல் தொகுதி கடந்த 23 ஆம் திகதி நாட்டுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா அரிசியின் மற்றுமொரு தொகுதி கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் சந்தையில் ஏற்பட்டுள்ள கீரி சம்பா அரிசி பற்றாக்குறைக்கு தீர்வாக, ஜி.ஆர். 11 பொன்னி சம்பா அரிசியை கடந்த 15 ஆம் திதகி முதல் இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதன்படி, இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களைப் பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு இறக்குமதியாளருக்கு அதிகபட்சமாக 520 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

நாட்டில் மதிப்பிடப்பட்ட ஆண்டு அரிசி நுகர்வு சுமார் 2.4 மில்லியன் மெற்றிக் தொன் என்பதுடன், இதில் கீரி சம்பாவின் ஆண்டு நுகர்வு 10 வீதம், அதாவது சுமார் 200,000 மெற்றிக் தொன் ஆகும். (அ)

# நாட்டில் சீரற்ற காலநிலையினால் இதுவரை 31 ஆயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 28

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 18 மாவட்டங்களில் 7,944 குடும்பங்களைச் சேர்ந்த 31,623 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இதுவரையான காலப்பகுதியில் 4 பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் 5 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், பகுதியளவில் 847 வீடுகள் சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவித்தல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் , தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்தார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி காரணமாக, நில்வளா கங்கை, கிங் கங்கை, களு கங்கை மற்றும் அத்தன கல்லு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டங்கள் உயர் மட்டத்தில் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# எதிரணிகளின் கூட்டம் நவ. 21 இல்!

கொழும்பு, ஒக். 28

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் 21 ஆம் திகதி பொதுக் கூட்டமொன்றை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

நவம்பர் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நுகேகொடையில் இக்கூட்டம் நடத்தப்படும் என்று கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பின்போது எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் வலியுறுத்தினர்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வுக்கு அனுப்ப நடவடிக்கை

கல்முனை, ஒக். 28

இரு வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு அம்பாறை, கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்பர் வீதி பகுதியில் 18 வயதுடைய சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த சந்தேக நபர் சுமார் 6 தட வைக்கு மேல் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இம்முறை குறித்த சந்தேக நபரை கல்முனை நீதிமன்ற நீதிவான் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் என்பதுடன் சந்தேக நபருக்கு எதிரான சகல ஆதாரங்களையும் அடுத்துவரும் தவணையில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இந்த சந்தேக நபர் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி வழிகாட்டலில் சென்ற உதவி பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான எம். முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழு கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

அடுத்து பெரிய நீலாவணை பொலிஸ் பகுதியில் உள்ள மருதமுனை புறநகர் பகுதியில் போதைப்பொருளுடன் கைதான 32 வயது மற்றுமொரு சந்தேக நபரை சிறைச்சாலை அத்தியட்சகரின் ஊடாக புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். இதற்கமைய கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அஸாரின் நேரடி வழிகாட்டலில் இயங்கும் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான எம். முஸ்தபா தலைமையிலான பொலிஸ் குழுவினருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலையடுத்து கல்முனை தலைமையக நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் வழிகாட்டலில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இரு சந்தேக நபர்களும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டமையால் புனர்வாழ்வுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-01)

# ஐஸ் போதைப்பொருளுடன் பெண் வியாபாரி கைது

மட்டக்களப்பு, ஒக். 28

ஏறாவூர் பிரதேசத்தில் போதைப்பொருள் வியாபார நிலையமாக செயல்பட்டு வந்த வீடு ஒன்றை ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிட்ட பொலிஸார், பெண் வியாபாரி ஒருவரை 5,350 மில்லிக் கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 3 இலட்சத்து 61ஆயிரம் ரூபாய் பணத்தை மீட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து ஏறாவூர் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை குறித்த பிரதேசத்தில் பாடசாலை வீதியில் உள்ள வீட்டை முறையிட்டனர்.

இதன்போது, அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 56 வயது பெண்ணை 5,350 மில்லிக் கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-01)

# தடுப்பூசி பற்றிய சந்தேகத்தை நீக்கி தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை

## துறை சார்ந்தவர்களுக்கு பயிற்சி செயலமர்வு

கல்முனை, ஒக். 28

அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்றுவதற்கு தயங்குகின்ற மற்றும் மறுக்கின்ற குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதையடுத்து தடுப்பூசி பற்றிய தவறான சந்தேகங்களை நீக்குவதற்கும் தடுப்பூசியின் அவசியம் குறித்து பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு பிராந்திய தொற்றுநோய் தடுப்புப் பிரிவு திட்டமிட்டுள்ளது.

அந்த வகையில் கல்முனை பிராந்தியத்தில் தடுப்பூசி ஏற்றுவதற்கு தயங்குகின்ற மற்றும் மறுக்கின்றவர்களை சுகாதார ரீதியாகவும் மத ரீதியாகவும் தெளிவூட்டி தொற்று நோய்களுக்கு முன்கூட்டியே சிகிச்சை பெறுவதன் அவசியத்தையும் வலியுறுத்துவதற்காக துறை சார்ந்தவர்களுக்கு பயிற்சியளிக்கும் செயலமர்வு கடந்த சனிக்கிழமை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமைவாக, கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவு ஒருங்கிணைப்பு செய்த குறித்த செயலமர்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்றது.

இதில், பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு மருத்துவர்களான எச். றிஸ்பின், ஐ. றிஸ்னீன் முத், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-06)

# வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது பஸ்!

## அரந்தலாவ பகுதியில் சம்பவம்



கல்முனை, ஒக். 28

அம்பாறை மாவட்டம், மகா ஓயா, அரந்தலாவ பகுதியில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது பஸ்ஸில் 34 பேர் பயணித்த நிலையில் எந்தவித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# திருட்டுகள் அதிகரிப்பு

நிந்தவூர், ஒக். 28

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பிரதேசத்தில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களிலிருந்து பொதுமக்கள் தங்களது உடைமைகளையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் வகையில் பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் பொலிஸ் பிரிவில் குற்றங்களைத் தடுக்க பின்வரும் அம்சங்களின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி வாசிகளான உங்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுத்துள்ள விசேட அறிவித்தலில் தெரிவித்துள்ளார். (எ-01)

# யானை உயிரிழப்பு! விசாரணை ஆரம்பம்

கல்முனை, ஒக். 28

மகாஓயா பகுதியில் இறந்த யானை குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் மகாஓயா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமகிபுர பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யானை ஒன்று இறந்த நிலையில் காணப்பட்டது.

அப்பகுதியில் உள்ள சோளம் உற்பத்தி செய்யும் விவசாயக் காணியில் விழுந்து யானை இறந்தமை குறித்து விசாரணைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த காட்டு யானையின் முன் இடது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக மிகவும் சிரமத்துடன் நடந்து வந்ததாகவும் பின்னர் இரண்டு நாட்கள் அம்பாறை வனவிலங்கு கால்நடை பிரிவின் கால்நடை மருத்துவர் நிஹால் புஷ்பகுமார தலைமையிலான குழுவினரால் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த யானை சிகிச்சைக்குப் பிறகு மீண்டும் நடக்கத் தொடங்கியதாக மக்கள் கூறினர்.

இந்த நிலையில் குறித்த யானை திடீரென இறந்த நிலையில் காணப்பட்டது. (எ-01)

# திருமலை, மட்டக்களப்பில் பலத்த காற்று வீசக்கூடும்

கொழும்பு, ஒக். 28

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகள், சப்ரகமுவ, மத்திய, தென், வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு சுமார் 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மேற்கு, சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையுடன் தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதை ஒட்டிய தென்மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட ஆழமான காற்றமுத்த தாழ்வு நிலை மேற்கு-வடமேற்கு நோக்கி நகர்ந்து "மோந்தா" என்ற புயலாக தீவிரமடைந்துள்ளது.

எனவே, காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை வழியாக மட்டக்களப்பு வரையிலான கடற்கரைக்கு அப்பாற்பட்ட ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை, மன்னார் மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு திசையிலிருந்து வீசக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன், காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன், அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில்...

கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

11 பேர் மட்டும் அல்லாமல் மேலும் பலருக்கு எதிராக இவ்வாறு வழக்கு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றோம். பொது மக்களிடம் பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் சட்டவிரோதமாக சொத்துகளை குவித்தவர்கள், போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்பில் உள்ளவர்களுக்கு எதிராக இவ்வாறு நடவடிக்கை எடுக்க உள்ளோம்-என்றார். (அ-05)

## அஸ்வெசும...

அபிவிருத்தி அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலக வங்கியின் பிரதிநிதிகள், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் கடந்த 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே 'அஸ்வெசும திட்டம்' குறித்து இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர உபாலி பன்னிலகே, பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திர ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், உலக வங்கியின் சமூகப் பாதுகாப்புத் தொடர்பான சிரேஷ்ட பொருளாதார நிபுணர் பிரான்செஸ்கா லமன்னா மற்றும் சிரேஷ்ட பாதுகாப்பு நிபுணர் சிறீனிவாஸ் வரதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சமூகப் பாதுகாப்புக்கான தரவுத்தளத்தை உருவாக்குவதன் மூலம், உண்மையிலேயே வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள், குடும்பங்களை அடையாளம் காண முடியும் என உலக வங்கியின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

பிரஜைகளின் தகவல்களை சமூகப் பாதுகாப்பு தரவுத்தளத்தில் உள்ளிடுவது அவர்களை அஸ்வெசும அல்லது பிற தொடர்புடைய சலுகைகளுக்குத் தகுதியுடையவர்களாக மாற்றாது என்றும், உள்ளிடப்பட்ட தரவைச் சரிபார்க்க முடியும் என்றும், தொடர்புடைய சலுகைகளை துல்லியமாக அடையாளம் காண முடியும் என்றும் இந்தக் குழு வலியுறுத்தியது.

இந்தச் சமூகப் பாதுகாப்பு அமைப்பு ஒரு நாட்டிற்கு ஒரு உற்பத்தி முதலீடாகும், எனவே தரவுத் தளத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தினர்.

"அஸ்வெசும" சலுகைகளை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதன்படி, கிராம ரீதியாக அமைக்கப்படும் குழுக்களின் மூலம் அஸ்வெசும பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து, சம்பந்தப்பட்ட கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளின் பெயர்களைக் காண்பிப்பதன் மூலம் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய முடியும் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இங்கு கருத்து தெரிவித்த, "அஸ்வெசும" திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்களுக்கு இந்தத் திட்டம் குறித்து போதுமான தகவல்கள் இல்லாததால் சில தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும், அவர்களின் வகிபாகம் குறித்து முறையான தெளிவுபடுத்தல்களை வழங்குவதன் ஊடாக இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தாம் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் தெரிவித்தனர். (அ)

## உலகில்...

கலாசார பாரம்பரியத்தை கொண்ட இடமாக அமைந்துள்ளமையினால், உலகளாவிய ஈர்ப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

லோன்லி பிளனட்டின் "சிறந்த பயணம் 2026" இன் இத்தாலிய மொழி பதிப்பு கடந்த 22 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தனித்துவமான அங்கீகாரம் இலங்கையின் சர்வதேச ஈர்ப்பை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், சுற்றுலா துறையில் சமூக அடிப்படையிலான சுற்றுலா அனுபவங்களை ஊக்குவிக்கவும் ஒரு சக்திவாய்ந்த சந்தைப்படுத்தல் கருவியாக செயல்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## போதைப்பொருள்...

அடுத்த 2 அல்லது 3 வருடங்களுக்குள் இந்த நாட்டில் போதைப்பொருட்களை இல்லாது ஒழிப்பதே எமது இலக்காகும். பாதாள உலகக்குழு நடவடிக்கைகள் இந்த போதைப்பொருள் நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பிரச்னைகளும் தற்போது பொலிஸாரின் தலையீட்டால் குறைக்கப்பட்டுள்ளன. முப்படைகளின் ஆதரவு உள்ளது. இப்போது நாங்கள் தொடர்ந்து சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கிறோம். இருப்பினும் இது போதாது என்றே நாங்கள் நினைக்கிறோம். அதனாலேயே இந்த நாட்டின் அனைத்து துறைகளையும் அனைத்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் தேசிய வேலைத்திட்டமாக இதனை மாற்றுவதற்கு தேவையான விடயங்களை நாங்கள் தயாரித்துள்ளோம் - என்றார். (அ)

## எதிர்க்கட்சிகளின்...

நேற்று கொழும்பு - கொம்பனித் தெருவில் உள்ள பிரபல விருந்தகம் ஒன்றில் அவசர சந்திப்பை நடத்தினர்.

மிகவும் இரகசியமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில், எதிர்வரும் நவம்பர் 21 பேரணி குறித்து நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, ஒரு அரசியல் தலைவர், "பேரணியை அரசாங்கமும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. எனவே, அதிகபட்ச ஒழுக்கத்துடன் இந்த பேரணியை நடத்த வேண்டும். ஏனெனில், அரசாங்கம் இந்தப் பேரணியில் குழப்பங்களை ஏற்படுத்த முயலலாம்" என்று எச்சரித்துள்ளார்.

மற்றொரு தலைவர், "ஆம், அது உண்மைதான். மிகப் பெரிய மக்கள் கூட்டம் வரவிருப்பதால், மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மக்கள் கட்டுப்பாடு குறித்து எங்கள் அமைப்பாளர்களுக்கு நல்ல புரிதலை ஏற்படுத்த வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

இடதுசாரி பாரம்பரிய அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர், " ஐக்கிய மக்கள் சக்தி" நிச்சயமாகப் பங்கேற்கிறதா?" என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர், "ஆம், நிச்சயமாகப் பங்கேற்கிறது. இது தொடர்பாக கலந்துரையாட அண்மையில் நடந்த கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தொடர்ந்து கலந்துகொண்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு தலவத்துகொடையில் யூடியூபர்கள் நடத்திய சந்திப்பிலும் சுஜீவ சேனசிங்க பங்கேற்றார். எனவே, ஐக்கிய மக்கள் சக்தி குறித்து எந்தப் பிரச்னையும் இல்லை. சுஜீவ உள்ளிட்ட சிலர் எங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்" என்று உறுதிப்படுத்தினார். (அ)

## வெளிநாடுகளில்...

பணியகத்தின் 40 வது ஆண்டு நிறைவை குறிக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறினார்.

வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்குவதற்கும் தேவையான சட்ட கட்டமைப்பை நிறுவுவதற்கும் தேவையான வசதிகளை வழங்குவதற்காக பொது நிர்வாக அமைச்சினால் ஏற்கனவே ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

## சட்டவிரோத...

சொத்து குவித்தார் எனும் சந்தேகத்தில் நபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவரின் தொலைபேசியில் இன்னொரு நபரிடம் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றை படம் எடுத்து வட்ஸ் அப் மூலம் பொலிஸார் விசாரணை மேற்கொள்ளும் நபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதன் அடிப்படையில் குறித்த நபரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் கைத் துப்பாக்கியின் படத்தை தனக்கு அனுப்பியவரின் பெயரை குறிப்பிட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தின் உத்தரவைப் பெற்று மேலதிக நடவடிக்கைகளை ஆரம்பிப் பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளது. (ஐ-3)

## தமிழ்...

மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அழுத்தம் கொடுத்துவருகின்றன. இந்த அழுத்தத்தால் தேர்தல் நடத்தப்படுவதற்குரிய சாத்தியமும் உள்ளது. எது எப்படி இருந்தாலும் இவ்வருட இறுதிக்குள் அல்லது அடுத்த வருடம் ஆரம்பத்தில் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும்.

அதேவேளை, மகிந்த, ரணில் ஆட்சி காலங்களின்போது, வடக்கில் அரசியல் பிரச்னை இல்லை என்ற விம்பம் உருவாக்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையிலும் தமிழர்களுக்கான உரிமை சார்ந்த விடயங்களின் முக்கியத்துவம் மழுங்கிவருகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையிலான பிளவும் இதற்கு காரணம். பிளவுகள் இருந்தாலும் பொது வேலைத்திட்டத்தின்கீழ் வடக்கில் இருந்து ஒருமித்த குரலொன்று அவசியம். அப்போதுதான் தீர்வுக்குரிய அழுத்தம் பிரயோகிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்." - என்றார்.

## அரசு பதவி...

நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும், அவர் தலைமையிலான அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகள் எவ்வித நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியை போன்று நாங்கள் தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு பணிப்புறக்கணிப்பு போராட்டங்களை மேற்கொள்ளவில்லை. வீதியில் இருந்து போராட்டம் செய்யவில்லை.

நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் அரசாங்கத்தை தெரிவு செய்துள்ளதால் அரச நிர்வாகத்தை நாங்கள் நெருக்குள்ளாக்கவில்லை. 5 வருட பதவி காலத்தை நிறைவு செய்தற்கு இடமளித்தோம். ஆனால், அரசாங்கம் பதவி காலத்தை நிறைவு செய்ய இடமளிப்பதற்கு நாட்டு மக்கள் தயார் நிலையில் இல்லை.

ஜனநாயக கட்டமைப்பில் இருந்து கொண்டு அரசாங்கம் சர்வாதிகாரத்தை கட்டவிழ்த்துள்ளது. அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை அனைவரும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒன்றுப்பட வேண்டும் - என்றார். (அ)

## பொலிஸ் மா...

அரசியல் அல்லாத காரணங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். அது என்னவென்று தெரியப்படுத்த வேண்டியது பொலிஸ்மா அதிபரின் பொறுப்பாகும்.

அவ்வாறு இல்லாமல் மறைமுகமாக அறிக்கை வெளியிடுவது பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினருக்கு செய்யப்படும் அவமதிப்பாகும். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பொலிஸ்மா அதிபரின் கூற்றில் வெளிப்படுவது முறைப்பாட்டாள ரையும், பாதிக்கப்பட்டவரையும் குற்ற வாளியாக மாற்றும் முயற்சியாகும். அரசாங்கத்தின் பிரசார திட்டத்திற்கு ஏற்ப பொலிஸ்மா அதிபரின் அறிக்கை கள் சுதந்திரமான பொலிஸின் இருப்பையே கேள்விக்குறியாக்கியுள்ளது.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களை பொலிஸ்மா அதிபருக்கு வழங்கி, பொலிஸ்மா அதிபர் நினைத்தபடி அறிக்கைகளை வெளியிட்டு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளில் நாடு அடக்குமுறை பொலிஸ் அதிகார இருளின் நிழலாகவே நாங்கள் காண்கிறோம்.

இந்த ஆபத்து அனைத்து ஜனநாயக அரசியல் நீரோட்டங்களில் ஈடுபடும் அனைவரின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதை ஊடக சந்திப்பாக மாற்றும் பொலிஸ் நடவடிக்கைகள் மூலம் உண்மையான கேள்விகளை மறைக்க எடுக்கும் குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியான ஜகத் விதான பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு தொடர்பான தீர்மானத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு எதிராக நாங்கள் எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்." - என்றுள்ளது.

## ஹிட்லரின்...

தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து ஒருவருடம் நிறைவடைந்துள்ளது. ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்கு பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால், ஒரு வாக்குறுதிகூட இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் சட்டத்தின் ஊடாக பறிக்கப்பட்டன. இதனால் பொதுமக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் அமைப்பின் காலத்தில்தான் நாட்டு மக்களும் அரசியல்வாதிகளும் அச்சடைந்திருந்தார்கள். ஆனால், தற்போது அரசியல்வாதிகள் பாதாளக் குழுக்களுக்கு அச்சமடைந்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

ஒரு இலட்சம் பேரையேனும் கொன்று ஆட்சியை தக்கவைத்துக்கொள்வோம் என்று அரசாங்கத்தின் நகராதிபதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த ஒரு இலட்சம் பேரில் ஒருவரா வெலிகம பிரதேச சபையின் தலைவர் லசந்த விக்கிரமசேகர என்று கேட்கிறோம். இவர் படுகொலை செய்யப்பட்டதை அலட்சியப்படுத்தி, மனிதாபிமானமற்ற வகையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசியல் சேறுபூசுகிறது.

மரண தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு மாத்திரமே உண்டு. அந்த மரண தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. நிறைவேற்றுத்துறைக்கு அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தற்போது பாதாளக் குழுக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரிப்பு!

## சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 28

சீரற்ற காலநிலை காரணமாக , நீர் மூலம் பரவும் நோய்கள் அதிக ரித்து வருவதாகச் சுகாதார நிபு ணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மழைநீர் நுளம்புகளின் இனப் பெருக்கம் செய்வதற்கு ஏற்ற சூழ்நி லையை உருவாக்குவதால், டெங்கு, லெப்டோஸ்பிரோசிஸ், ஹெபடை டிஸ் ஏ, தைபொய்ட் மற்றும் வயிற் றுப்போக்கு போன்ற நோய்கள் வேகமாகப் பரவக்கூடும் என்று மூத்த ஆலோசகர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகள் நுளம்புகளின் இனப்பெருக்கத்துக்கு ஏற்ற இடங்களாக மாறும் எனவும் வெள்ள நீர் விலங்குகளின் சிறுநீருடன் கலந்து, லெப்டோஸ்பிரோசிஸ் அல்லது எலிக் காய்ச்சல் பரவ வழிவகுக்கும் என்றும் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

விவசாயிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் வெள்ளம் அல்லது சேறு நிறைந்த பகுதிகளில் வேலை செய்பவர்கள் அல்லது நடந்து செல்பவர்கள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் எச்சரித்துள்ளார்.

அவர்கள் பாதணிகள், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு ஆடைகளை அணியவேண்டும் எனவும் மேலும் காய்ச்சல், தலைவலி, சளி அல்லது தசை வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வெள்ளத்தின்போது மக்கள் பெரும்பாலும் கிணறுகள் அல்லது ஓடைகளிலிருந்து அசுத்தமான தண்ணீரைப் பயன்படுத்துகிறார்கள். இது இந்த தொற்றுநோய்களின் அபாயத்தை அதிகரிக்கிறது என்றும் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

எனவே நுளம்பு உற்பத்தியைக் குறைக்கக் குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தவும், சாப்பாட்டுக்கு முன் கைகளைக் கழுவுதல், கொதிக்க வைத்த தண்ணீரைக் குடித்தல், உணவை மூடி வைத்தல், சேற்று அல்லது தேங்கி நிற்கும் தண்ணீரைத் தவிர்ப்பது போன்ற எளிய தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள் ளார்.

(அ)

# பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு முறையான திட்டத்தை வகுக்கவேண்டும்

கொழும்பு, ஒக். 28

எதிர்வரும் பண்டிகைக் காலத்தைக் கருத்தில் கொண்டு வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாது காப்பு அமைச்சு ஒரு முறையான திட்டத்தை வைத்திருக் கவேண்டும் என தேசிய நுகர்வோர் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசாங்கம் அரிசி, மரக்கறிகள், சீனி, பருப்பு, மற்றும் மா போன்ற அத்தியாவசியப் பொருட் களை அடையாளம் கண்டு, பண்டிகைக் காலம் முழுவதும் அவற்றின் விலைகள் நிலையாக இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே குறித்த பொருட்களின் விலைகள் அதிக ரித்துள்ளன. பண்டிகைக் காலத்திற்காக வர்த்தகம், வணி கம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு எந்தத்திட் டத்தையும் வைத்திருப்பதாக நான் நினைக்க வில்லை. அவர்கள் உடனடியாக திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் எனவும் அசேல சம்பத் தெரிவித்தார். (அ)

# 2 இலட்சத்தை அண்மித்துள்ள போதைப்பொருள் வழக்குகள்!

கொழும்பு, ஒக். 28

இலங்கையில் இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 22 ஆம் திகதி வரையான சுமார் பத்து மாத காலப்பகுதியில், நாட்டில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 672 வழக்குகள் நாட்டின் பல்வேறு நீதிமன் றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த காலப்பகுதியில், பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 320 சுற்றிவளைப்புகளில், போதைப்பொருள் தொடர்பில் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 938 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின்போது, 60 இலட்சத்து 19 ஆயிரத்து 343 க்கும் அதிகமான நபர்கள் சோதனை யிடப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வகைகளில், ஐஸ் போதைப்பொருளே அதிகளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி மொத்தமாக 2,539.5 கிலோகிராமுக்கும் அதிகமான ஐஸ் கைப்பற்றப்பட்டு, இது தொடர்பாக 66,593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து, 1,482.8 கிலோகிராம் ஹெரோ யின் கைப்பற்றப்பட்டு 58,130 வழக்குகளும், 14,434.4 கிலோகிராம் கஞ்சா மற்றும் கேரள கஞ்சா கைப்பற்றப் பட்டு 58,724 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 32.6 கிலோகிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டு 91 வழக்குகளும், 30 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு 2,808 வழக்குகளும், 575 கிலோகிராம் வேறு போதைப்பொ ருட்கள் கைப்பற்றப் பட்டு 1,474 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (அ)

# 17,000 சிறுவர்கள் மிகவும் பாதுகாப்பற்ற நிலையில்!

கொழும்பு, ஒக். 28

மிகவும் பாதுகாப்பற்ற நிலையில் வாழும் சுமார் 17,000 சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

வடமேல் மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசாங்கம் அனைத்து மட்டங்களிலும் உள்ள சிறுவர்களைக் கண்காணித்து வருவதாகவும், எந்தவொரு சிறுவரையும் விட்டுவிடாமல், ஒவ்வொரு சிறுவருக்கும் சமூகப் பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார்.

ஜனாதிபதியின் தலைமையிலுள்ள தற்போதைய அரசாங்கம், எதிர்காலச் சந்ததியினர் வாழ்வதற்கு ஏற்ற நாட்டை உருவாக்குவதற்கு உறுதி பூண்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# கல்வித் தரப்பின் கேள்விகளுக்கு மௌனம் காக்கிறது அரசாங்கம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 28

கல்வி மறுசீரமைப்பு தொடர்பான ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார்ந்த தரப்பினரால் எழுப்பப்பட்ட முக்கிய கேள்விகளுக்கு அரசாங்கம் மௌனம் காப்பது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் கேள்வி எழுப்பி யுள்ளது.

இந்தப் பிரச்னைகளுக்கு உடனடியாக பதிலளித்துத் தீர்வு காணுமாறு அதிகாரிகளை குறித்த சங்கம் வலியு றுத்தியுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தொழிற்சங்கங்கள் இந்த மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் மற்றும் சிக்கல்களை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியபோது, அதற்குப் பதிலளிப்ப தற்குப் பதிலாக, அரசாங்கம் இந்த பிரச்னைகளைக் கேட்டுக்கொண்டதுபோல் நடித்துவிட்டு, தற்போது 9 மாகாணங்களுக்கும் காண்பிக்கப்பட்ட அதே திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது.

அத்துடன் மறுசீரமைப்புகள் பல சிக்கல்களை ஏற்படுத்துவதாகக் குற்றம்சாட்டிய அவர், புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஆறாம் வகுப்பு மாணவர்க ளுக்கு நடத்தப்படும் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளுக்கு கட்டணம் செலுத்தப்படவேண்டும் என்று கல்வி அமைச்சு கூறியிருந்தாலும், அத்தகைய கட்டணம் எதுவும் இதுவரை செலுத்தப்படவில்லை- என்றார். (அ)

# வாகனங்களில் விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 28

நிதிக் கொள்கைகள் மற்றும் சந்தை நிலவரங்கள் கார ணமாக இலங்கையில் வாகனங்களின் விலை கணிசமா கக் குறைந்துள்ளதால், வாகனங்களை வாங்குபவர்க ளுக்கு இதுவே சிறந்த நேரம் என்று வாகன இறக்குமதி யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உப தலைவர் அரோஷ ரொட்றிக்கோ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வரி மாற்றங்கள் இல்லாவிட்டாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

ஜப்பானிய ஏலச் சந்தைகளில் இலங்கைக்குத் தேவை யான வாகனங்கள் அதிக அளவில் நிரம்பல் செய்யப்படு வதால், ஏல விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன.

அத்துடன், உள்ளூர் இறக்குமதியாளர்களும் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களைக் கொண்டு வந்துள்ளதால், சந்தையில் தேவைக்கு அதிகமாக வாகனங்களின் இருப்புக் குவிந்துள்ளது.

இதன் காரணமாக, பொதுவாக ஒவ்வொரு வாகனத் தின் விலையும் 10 இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரையில் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக, இறக்குமதியாளர்கள் வங்கிக் கடன்களை அடைப்பதற்காகவும், இருப்புகளைக் குறைப்பதற்காக வும் சிலர் நஷ்டத்திற்கு கூட வாகனங்களை விற்கிறார் கள்.எனவே, இது வாகனங்களை வாங்குபவர்களுக்குச் சிறந்த நேரமாக உள்ளது-என்றார். (அ)

# தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் இலங்கையர்கள் எண்ணிக்கை வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 28

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல், மத்திய கிழக்கு போன்ற வெளிநாடுகளுக்குத் தொழில் நிமித்தம் செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை குறைவடைந் துள்ளதாக மத்திய வங்கி தரவுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் மீட்சி அடைந்துள்ள நிலையில் இந்த எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆயிரத்து 873 பேரும், பெப்ரவரி மாதம் 22 ஆயிரத்து 271 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன், மார்ச் மாதம் 21 ஆயிரத்து 552 பேரும், ஏப்ரல் மாதம் 22 ஆயிரத்து 11 பேரும் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளனர்.

இந்த பின்னணியில், 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வோரின் எண்ணிக்கை 5 வீதம் குறைவடைந்து மொத்தமாக, ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 37 ஆக பதிவு செய்யப்பட்டதாக மத்திய வங்கி தரவுகள் தெரி விக்கின்றன. (அ)

# குற்றக்குழுக்களுடனான தொடர்பினால் ஜகத் விதான எம்.பிக்கு உயிரச்சுறுத்தல்!

கொழும்பு, ஒக். 28

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதற்குக் காரணம் அரசியல் காரணங்கள் அல்ல எனவும், மாறாக திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் சட்டவிரோத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள நபர்களுடனான அவரது தொடர்புகளே எனவும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தல்கள் அத்தகைய தொடர்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு பாராளுமன்ற உறுப்பினர் விதானவுக்கு தற்காலிகப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது.ஆனால் இது அரசியல் ரீதியாகத் தூண்டப் பட்ட விடயம் அல்ல.

பாதாள உலகக் குழுக்களுடனும் சட்டவிரோத நடவடிக்கைகளுடனும் தொடர்புடைய நபர்களுடன் அவருக்கு இருந்த கடந்த கால கொடுக்கல் வாங்கல்களையே புலனாய்வு அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜகத் விதான தனது வாகனத்தில் இருந்து இறங்கும் போது தன்னைக் குறிவைத்து ஒரு கொலைத் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தனக்கு அறிவிக்கப்பட்டதாகப் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

அவரது கோரிக்கையத் தொடர்ந்து, அவரது பாதுகாப்புக்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

அச்சுறுத்தலின் மூலத்தை உறுதிப்படுத்தவும் சம் பந்தப்பட்ட நபர்களை அடை யாளம் காணவும் மேல திக விசாரணை நடைபெற்று வருகின்றன-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org